# The Weapon that Destroys Humanity & Arrogance

**Dr. S. Karuthan**
*Assistant Professor, Department of Tamil Studies*
*National College (Autonomous), Tiruchirappalli*

**மலர்: 10**

**சிறப்பிதழ்: 1**

**மாதம்: அக்டோபர்**

**வருடம்: 2025**

**P-ISSN: 2454-3993**

**E-ISSN: 2582-2810**

**DOI:**
https://doi.org/10.5281/zenodo.17255925

**Abstract**

*The concept of "Anava" (ego or self-conceit) is a fundamental aspect of Saiva Siddhanta philosophy. Anavais considered one of the three primary impurities (mala) that afflict the soul, along with Maya (illusion) and Karma (action). It is described as a primal ignorance that obscures the soul's true nature and prevents it from realizing its inherent divinity. According to Saiva Siddhanta, Anava arises from the soul's inherent imperfection and is the root cause of its bondage to the cycle of birth and death. The philosophy emphasizes the need to transcend Anava through spiritual practices and self-realization, ultimately achieving liberation (Mukti) from the cycle of suffering. In the state of Mukti, the soul is freed from the influence of Anava, allowing it to realize its true nature and attain union with the divine.*

***Keywords:*** *Atharvanam – Brahma Veda, Pathi – Lord, Pasu – Soul, Paasam – Bondage, Kanmam – Karma, Pratiyandham – Relationship*

**References**

1. Tirumular, Tirumantiram, p.142
2. Umapathi Sivachariyar, Saiva Siddhantam, p.78
3. Tirumular, Tirumantiram, p.130
4. Sivaprakasam, Saiva Siddhanta Sastriram, p.139
5. Umapathi Sivam, Tiruvarutpayan, p.204
6. Ibid., p.267

# மனிதனை வீழ்த்தும் ஆயுதம் – ஆணவம்

***முனைவர் ச. கருத்தான்***
உதவிப் பேராசிரியர், தமிழாய்வுத்துறை
தேசியக்கல்லூரி (தன்னாட்சி), திருச்சிராப்பள்ளி

***அறிமுகம்***
*வாழ்க்கையின் மீது மனிதனுக்கு ஏற்படும் கவர்ச்சிக்கு ஆசைதான் அடிப்படை. "ஆசை என்னும் ஓர் வேட்கையே மனித வாழ்க்கையின் உயிர் நாடி" என்கிறது அதர்வண வேதம். ஆசைகள் அற்ற வாழ்க்கை வண்ணங்கள் இல்லாத வானவில் போன்றதாகும். ஆசைகள் இல்லாத இடத்தில் குற்றங்கள் அற்றுப்போகின்றன. குற்றங்களும் பாவங்களும் அற்றுப் போய்விட்டால் மனிதனுக்கு அனுபவங்கள் இல்லாமல் போய்விடுகின்றன. அனுபவங்கள் இல்லையென்றால் நன்மை தீமைகளை கண்டுபிடிக்க இயலாது. தவறுகளின் மூலமே மனிதன் உண்மையை உணர வேண்டும் என்பதற்காகவே இறைவன் ஆசையை தூண்டி விடுகிறான் என்கிறார் கவிஞர் கண்ணதாசன்.*

***கலைச்சொற்கள்:*** *அதர்வணம்- பிரம்ம வேதம், பதி- இறைவன், பசு-உயிர், பாசம்- உலகப் பற்று, கன்மம்-வினைப்பயன், பிரதியந்தம்-உறவு*

**மனித வாழ்வியல்**

உயிர்களின் துன்பத்திற்குக் காரணம் பாசம் என்பர் சைவர். ஆணவம், கன்மம், மாயை எனும் மும்மலங்களும் பாசம் எனப்படுகிறது. பதியுடன் சென்று பசுவை (உயிரை) ஒட்ட விடாமல் தடுப்பதால் இதனை பாசம் என்கின்றனர். கடவுளையும் உயிரையும் போல பாசமும் அனாதி என்பதைத் திருமூலர்,

**"பதி பசு பாசம் என பகர் மூன்றில்**
**பதியினைப் போல் பசு பாசம் அநாதி**
**பதியினைச் சென்று அணுகாப் பாசம்**
**பதியணுகின் பாசம் நில்லாவே"[1]**

என்று குறிப்பிடுகிறார். நெல்லில் உமியும் செம்பில் களிம்பும் போல உயிரின் பாசம் அனாதையே உடன் இருக்கிறது என்பதை மெய் கண்ட சிவாச்சாரியார்,

**"நெல்லிற்கு உமியும் நிகழ் செம்பிற்குக் களிம்பும்**
**சொல்லிற் புதிதன்று தொன்மையே-வல் மகன்மம் அன்றுறிவாம் வள்ளலார் பொன்வா**
**ளலர் சேர் சோகம் செய்க மவத் தாம்"[2]**

என்று திருமூலரின் கருத்தினை வலியுறுத்துகிறார். நெல்லின் முனை உமி தவிடு என்னும் ஒவ்வொரு பகுதியோடும் மும்மலங்களையும் ஒப்பிட்டு காட்டி விளக்க முற்படுகிற போது,

**"ஆணவம் மாயையும் கன்மமும் ஆம் மலம்**
**காணமுளையும் தவிடு உமி ஆன்மாவும்**
**தாணுவை ஒவ்வாமல் தண்டுவமாய் நிற்கும்**
**பேணுவாய் மற்றும் பாசம் பரித்தே"**

என்று திருமந்திரம் வலியுறுத்துகிறது. மும்மலங்களிலும் மூல மலம் ஆணவம். இது உயிரை அணு நிலைக்கு சிறுமைப்படுத்து வதால் இதனை ஆணவம் என்கின்றனர். ஆணவக் கலப்பினால் உயிர்கள் மீண்டும் பிறக்கின்றன. ஆணவத்தின் அளவிற்கு ஏற்பவே பிறவிகளும் மாறுபடுகின்றன. குறைந்த ஆணவ மலமுடைய உயிர்கள் மனிதப் பிறவியை எடுக்கின்றன. அதிக ஆணவம் உடைய உயிர்கள் அறிவில் குறைந்த விலங்குகளாய்ப் பறவைகளாய்ப் பிறக்கின்றன. குளிக்கப் போன இடத்தில் சேற்றை பூசிக் கொண்டது போல ஆணவ

அழுக்கை கலைய மாயப் பிறப்பினை பிறந்த உயிரானது கர்ம சேற்றை பூசிக் கொண்டு அதற்கு ஏற்ப இறந்து மீண்டும் ஆணவத்தால் பிறக்கிறது. சிவஞானபோத முதல் சூத்திரம் மும்மலக் காரியத்தையும்,

**"அவன் அவள் அது எனும் அவை மூவினைமையின்**
**தோற்றிய திதியே; ஒடுங்கி மலத்துலதாம்;**
**அந்தம் ஆதி என்மனார் புலவர்"[3]**

என்று விவரிக்கிறது. இதனில் ஒடுங்கி மலத்துள்ளதாம் என்னும் பகுதி மூன்று மலங்களின் விளைவையும் விளக்குகிறது. மலத்தின் கண் உலகம் என்று விரிக்கிற போது உயிர் ஒடுங்கி மாயமலத்தின்கண் உள்ளது என்றும், மலத்தால் உலகம் என்று உரைக்கிற போது ஒடுங்கிய உயிர் ஆணவ மலத்தின் காரணமாக மீண்டும் உண்டாகிறது என்றும் மலத்தில் உலகம் என்று உரைக்கின்ற போது கர்ம மலத்தில் உழலுகின்றது என்றும் மும்மலச் செய்திகளையும் மெய் கண்ட சிவாச்சாரியார் விரிவாக எடுத்துரைக்கிறார்.

## நல்வினை செய்தல்

மாயை தீயது எனினும் அதுவே தனு, கரண, புவன, போகம் என்னும் அனைத்து மாய் நிற்கிறது. இவ்வுடலை மாயா இயந்திர தனு என்று சிவஞானபோதம் குறிப்பிடுகிறது. இவ்வுடலை வைத்துக்கொண்டு நல்வினைகளையும் செய்யலாம், மாறாக தீய வினைகளையும் செய்யலாம். உயிர் உய்யும் வண்ணம் நல்ல வினைகளைச் செய்ய சரியை கிரியை யோகம் ஞானம் என்ற நல்ல நெறிமுறைகளை பற்றி நடப்பதற்கு நமக்கு உடல் தேவை. எனவேதான் உடலை ஓம்பும் உபாயத்தைத் திருமந்திரம் பெரிதும் வலியுறுத்திச் சொல்லுகிறது. மாயை உயிருக்கு உடல் முதலியவற்றைத் தந்து உயிருக்கு உதவுவதால் அது நன்மலமாகும். கர்ம வளமும் தீயது எனினும் நற்கருமம் அல்லது சிவ புண்ணியமே உயிரை நன்மார்க்கத்திற்கு அழைத்துச் செல்லும். இருவினையும் தீதே ஆயினும் தீவினை என்பது இரும்பு விலங்கு. நல்வினை பொன்விலங்கு. எனினும் நல்வினைகள் ஆகிய சரியை கிரியை யோக ஞானங்களை இரு வினை ஒப்புக்கும் மலபரிபாகத்திற்கும் வழி செய்து விளக்குவதற்கு கர்மமலம் ஓரளவு நன்மலமே ஆகும்.

## பிரதிபந்தம்

ஆணவம் உயிரின் பிரகாசத்தை மறைப்பதால் இதனை பிரதிபந்தம் என்பர். ஆணவ இருளை அறிவு ஒளியின் காரணமாகவே அகற்ற முடியும். ஆணவம் இல்லாத உயிர் இறைத் தன்மையை அடைகிறது. ஆணவம் நீங்கிய உயிர் அறிவு ஒலியுடன் அனைத்து ஆற்றலையும்அதிகசுதந்திரமாகவும்திகழும். கட்டற்ற அவ் உயிர்க்கும் பிறப்பு இறப்பு இல்லை. ஆணவத்தில் இருந்து விடுபட்டு நிற்கும் அப்பேறே வீடுபேறு என்று சான்றோர் பெருமக்களால் அடையாளப்படுத்தப்படுகிறது. இதனை சிவநெறி பிரகாசம் என்னும் சைவ சித்தாந்த நூலானது,

**"ஏதுக்கு ஆணவம் உண்டென்ன வேண்டும் எனில் உயிர்கள் ஞானத்தை தடுப்பது ஒன்றங்கு இல்லையால்**
**மாதுக்க முற உயிர்கள் எவ்வறிவும் எல்லா வல்லமையும் சுதந்திரமும் மறு உயிரும் பிறப்பால் தீதுற்று வருந்தது ஞான உருவமாற் சிவன் போலவே நிற்கும் சுற்றறிவும் ஆகா ஓதற்ற முக்கி என்பது ஏது விடில் என்றே பிரித்திடில் அவ்வாணவமாம் கூறுங்காவே"[4]**

என்று குறிப்பிடுகிறது. புற இருட்டு பொருளை மறைக்கும் தான் மறையாது. ஆனால் இருட்டாகிய ஆணவமோ உயிரின் உள்ளொழியை மறைப்பதோடு தானும் மறைந்து ஒரு வினோத இருட்டை உண்டாக்கும். இதனை திருவருட் பயன் என்ற நூலானது,

**"பலரைப் புணர்ந்தும் இருட்பாவைக்கு உண்டென்றும் கணவருக்கும் தோன்றாத கற்பு"[5]**

என்று உணர்த்துகிறது. ஆணவம் என்னும் கருப்புப் பாவை பலரிடம் சேர்ந்து இருக்கிறாள். ஆனால் அவள் தான் சேர்ந்திருக்கும் கணவன் கண்ணிலும் படாத கற்புடையவளாக இருக்கிறாளே என்று உமாபதி சிவாச்சாரியார் ஆணவத்தின் கொடுமையை நகைச்சுவையோடு எடுத்துரைக்கிறார்.

### ஆணவத்தின் ஏழு வகைகள்

ஆணவம் மறைந்திருந்து வெளிப்படும் என்பதை கிழங்குடன் ஒப்பிட்டு காட்டியதிலிருந்து நாம் உணரலாம். தண்ணீர் வற்றிய தாமரைக் குளத்தில் பசும் புல்லும் தலை காண்பது அரிது. தண்ணீர் வந்த பின்னே தாமரை காடு போல் பூத்து விடும். எங்கிருந்து வந்தது இக்காடு? கிழங்கு வடிவில் கீழே பதுங்கி கிடந்த தாமரை தான் இன்று காடாயிற்று. பதுங்கி இருந்து செயல்படும் ஆணவத்தை அகந்தை கிழங்கு என்று அழகாக பாடுகிறார் குமரகுருபரர். ஆணவ மலத்தின் எழுநிலை தொழிற்பாட்டினை சிவஞானபோதத்தில் ஏழு வகைகளாக விளக்கப்படுகின்றன. மோகம், மதம், அராகம், கவலை, தாபம், வாட்டம், விசித்திரம் என்று அவை வகைப்படுத்தப்படுகின்றன. மோகம் என்பது இந்த ஏழு வகைகளிலும் முதலாவதும் மூலமும் ஆகும். இது கட்டு நீங்கும் காரும் உயிருடன் இணைந்தே உள்ளது. இதுவே அரிவையர் முதலிய பல்வேறு நிலைகளில் மயங்குதற்கு ஏதுவாகவும் உள்ளது.

**"மதம் தான் விரும்பும் அரிவையே மேலென மதிப்பு புகழ்வது**
**அராகம் அவள் மேல் ஆசை மிகுவிப்பது**
**கவலை அவளை பிரிந்த வழி வருந்தச் செய்வது**
**தாபம் அவளுக்காக உள்ளே வெதும்பித் தவிப்பது**
**வாட்டம் அதனால் உள்ளமும் உடலும் வாடுவதற்கு ஏதுவாயது**
**விசித்திரம் உலக வாழ்வில் பல்வேறு சிந்தை செய்வதற்கு ஏதுவாயது"[6]**

என்று மகளிர் பால் வைத்துக் காட்டியதை எல்லா பொருளுக்கும் பொருத்திக் காணலாம். இத்தகைய பொடிய ஆணவம் என்பது ஒவ்வொரு மனிதரையும் விட்டு வைப்பதில்லை. தெய்வங்களைக் கூட சில நேரங்களில் ஆணவம் ஆட்டிப்படைத்து இருக்கிறது.

ராமாயணத்தில் மும்மலக் கருத்தை ஏற்றிச் சொல்லும் போது சகோதரனுக்காக போர் புரிந்த கும்பகர்ணனை கருமம் என்றும் தந்தைக்காக மாயப்போர் புரிந்த மேக நாதனை மாயை என்றும் என்னையே நம்பி இந்த நெடும்பழி தேடிக் கொண்டேன் என்று இரு மாந்து பேசும் ராவணனை ஆணவம் என்றும் இலக்கியவாதிகள் படைத்துக் காட்டுவர்.

கந்த புராணத்தில் முருகப்பெருமான் ஆணவத்தின் சின்னமான சூரபத்மனை அடக்கி வதம் செய்த நிலையில் அவன் நல்லுணர்வோடு பேசுவதாகப் படைக்கப்பட்டுள்ளது. முருகன் பால் அவன் மீண்டும் ஆணவத்தை சேர்த்த போது அவன் சேவலாகவும் மயிலாகவும் மாறி போருக்கு வருகிறான். தன் திருவருள் நோக்கால் அவனுக்கு ஞானத்தை நல்கி ஆணவத்தை போக்கி மயிலை தன் ஊர்தியாகவும், சேவலை தன் கொடியிலும் தமிழ்க் கடவுள் ஏற்றுக் கொள்கிறார்.

முக்தி நிலையில் ஆணவம் என்பது மனித உயிரை விட்டு முற்றிலும் நீங்கி விடுமா, நீங்காதா என்பது குறித்த ஓர் ஐயம் ஒவ்வொரு மனிதனுக்கும் இயல்பாகவே இந்த உலகத்தில் ஏற்படுவது மரபாக உள்ளது. ஒரு சாரார் முக்தி நிலையில் ஆணவம் அறவே நீங்காது வலிமை குன்றியிருக்கும் என்று வாதிட்டு கந்தபுராணக் காட்சியை

உதாரணமாகக் காட்டுவார்கள். வேறு சிலரோ ஆணவம் உயிரை விட்டு நீங்கும் நிலையில்தான் முக்தி அல்லது வீடு வேறு என்பது மனிதர்களுக்கு கிடைக்கிறது என்பதை அறுதியிட்டுச் சொல்லுகிறார்கள்.

**முடிவுரை**

அரிசியோடு அநாதியே சகசமாய் நின்ற உமி, தவிடு முளை அவ்வரிசியை விட்டு நீங்குதல் போல மும்மலங்களும் நீங்கும். அதன் பின் அரிசி முளையா நிலை பிறவா நடைபெறும் என்று கூறி சிவஞான சித்தியார் என்ற நூலானது முக்தியால் ஆணவம் முழுவதுமாக நீங்கும் என்பதை நிலைநாட்டுகிறது. மனித வாழ்க்கை என்கிற நோயிலிருந்து நீங்குவதற்கு நாம் ஆணவம் என்கிற கொடிய அரக்கனை நம்மிடையே முழுவதுமாக நீக்க வேண்டும் என்பதை சைவ சித்தாந்தங்கள் வாயிலாக முற்றிலும் அறிகிறோம்.

**சான்றெண் விளக்கம்**


1. திருமூலர், திருமந்திரம், ப.எ-142
2. உமாபதி சிவாச்சாரியார், சைவசித்தாந்தம் - ப.எ-78
3. திருமூலர், திருமந்திரம் - ப.எ-130
4. சிவப்பிரகாசம், சைவசித்தாந்தசாத்திரம் ப. எ-139
5. உமாபதிசிவம், திருவருட்பயன் ப.எ - 204
6. மேலதுப.எ-267